**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.</u>**
**முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் B.Com, B.L . ,**
**நீதித்துறை நடுவர், மணப்பாறை**
**2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 04-ம் நாள் வியாழக்கிழமை**
**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.109/2025</u>**
**(CNR NO. TNTP10-000854-2025)**

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>மணப்பாறை அனைத்து மகளிர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.20/2022 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | 1. மனோகரன்,<br>த.பெ. காத்தான்<br>2. காத்தான்,<br>த/பெ. முருகன்,<br>3. குஞ்சாயி (எ) குஞ்சம்மாள்,<br>க/பெ. காத்தான் |
| குற்றப்பிரிவு | ச/பி.498(A), 494, 506(1) IPC |
| வனையப்பட்டது | ச/பி.498(A), 494, 506(1) IPC |
| தீர்மானம் | முடிவாக, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 498(A), 494, 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம்

| வ. எண் | பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | மனோகரன் | காத்தான் | இந்து | கூலி | நத்தம் புதூர், இளங்காகுறிச்சி அஞ்சல், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். | 29/ 2022 |
| 2. | காத்தான் | முருகன் | இந்து | கூலி | நத்தம் புதூர், இளங்காகுறிச்சி அஞ்சல், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். | 53/ 2022 |
| 3. | குஞ்சாயி (எ) குஞ்சம்மாள் | காத்தான் | இந்து | கூலி | நத்தம் புதூர், இளங்காகுறிச்சி அஞ்சல், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். | 47/ 2022 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 05.09.2020 |
| புகார் கொடுத்த நாள் | : | 23.08.2022 |
| எதிரிகளை கைது செய்த நாள் | : | – |

| | | |
|---|---|---|
| பிணை விடுவிப்பு | : | (The Hon'ble Principal District and Sessions Judge, Tiruchirappalli, Bail Order in Cr.M.P.Nos. 4635/2022 and 5338/2022 dated 17.11.2022) Released on Bail –01.12.2022. |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 02.04.2026 |
| விசாரணை முடிவு | : | 08.05.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | -- |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 09.02.2023 |
| Date of Questioning | : | 18.08.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | – |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PW's Chief Cross<br>PW1 02.04.2026 –<br>PW2 09.04.2026 09.04.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 28.04.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |

| | | |
|---|---|---|
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | –– |

இவ்வழக்கானது 30.05.2025–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 08.05.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2** அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. R. ராஜ்மோகன்** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது புகார்தாரர் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் படி எழுந்த வழக்காகும்.

**<u>2. குற்ற முறையீட்டின் சுருக்கம்</u>:–**

இவ்வழக்கின் வாதியான கௌசல்யா என்பவருக்கும், **1–வது** எதிரிக்கும் கடந்த 15.07.2020–ம் தேதி ஊர் முக்கியஸ்தர்கள், உறவினர்கள் முன்னிலையில் வையம்பட்டி கிராமம், வைரம்பட்டியில் உள்ள காமாட்சி

அம்மன் கோவிலில் காதல் திருமணம் நடைபெற்றுள்ளது. வாதிக்கு தற்போது ஒன்பது மாத பெண்குழந்தை உள்ளது. 1–வது எதிரி மனோகரன் என்பவருக்கு கடந்த 05.09.2020ம் தேதி விராலிமலையை சேர்ந்த பழனிச்சாமி மகள் சிம்ரன் என்பவரை 2, 3 எதிரிகள் சேர்ந்து திருமணம் செய்து வைத்துள்ளனர். மேற்படி சிம்ரன் என்பவருக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் கடந்த 17.09.2021–ம் தேதி ஆண் குழந்தை பிறந்துள்ளது. வாதியும், 1–வது எதிரியும் பெரம்பலூரில் இருந்து வந்துள்ளார்கள். மேற்படி தகவல்களை வாதியின் தகப்பனார் வாதியிடம் தெரிவித்தவுடன், வாதி ஊருக்கு போகவேண்டும், நத்தம்புதூருக்கு அழைத்து செல்லுங்கள் என்று 1–வது எதிரியிடம் வற்புறுத்தியதன் அடிப்படையில் இருவரும் நத்தம்புதூருக்கு வந்துள்ளார்கள். அங்கு வாதி 1–வது எதிரியிடம் இதுபற்றி கேட்டபோது 1–வது எதிரி ஆமாம். நான் சிம்ரன் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டேன். உன்னை வைத்து வாழ வேண்டும் என்றால் பத்து லட்சம் ரொக்கமும், ஒரு காரும் வாங்கி வா, இல்லையென்றால் உன்னோடு வாழமாட்டேன். சிம்ரனோடுதான் வாழ்வேன் என்று வாதியை திட்டியுள்ளார். வாதி என் வாழ்க்கைக்கு பதில் சொல் என கேட்டபோது 1–வது எதிரி வாதியின் கழுத்தை நெறித்து கொன்றுவிடுவேன் என்று கொலைமிரட்டல் விடுத்துள்ளார். எனவே, 1–வது எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவுகள் 498(A), 494, 506(i) IPC யின்படியும், 2 மற்றும் 3–வது எதிரிகளின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவுகள் 494 IPC யின்படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எதிரிகளின் மீது மணப்பாறை

அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3. வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:**

குற்ற பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு, எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு மறக்காமல் இவ்வழக்கின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிகளுக்கு எதிராக குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 240(1)ன் படி **1–வது** எதிரியின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவுகள் **498(A), 494, 506(i) IPC** யின்படியும், **2** மற்றும் **3–வது** எதிரிகளின் குற்றச்செய்கையானது சட்டப்பிரிவுகள் **494 IPC** யின்படியும் குற்றம் சாட்டப்பட்டு குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 240 பிரிவின் கீழ் அவரிடம் வினவிய போது எதிரிகள் பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.**1** மற்றும் அ.சா.**2** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.**1** முதல் அ.சா.ஆ.**3** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள்

எவரும் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

## 5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :-

(5.1) அ.சா.1. திருமதி. கௌசல்யா தனது சாட்சியத்தில் நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும், நான் M.sc படித்துள்ளேன் என்றும், ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள் என்றும், 1ம் எதிரி எனது கணவர் ஆவார் என்றும், 1ம் எதிரியுடன் தற்போது சேர்ந்து குடும்பம் நடத்தி வருகிறேன் என்றும், என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2. திருமதி. லியோனியா (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 23.08.2022-ம் தேதியன்று திருமதி. மகாலெட்சுமி அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது கௌசல்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பதிவு செய்யப்பட்ட மனுவினை விசாரணை செய்து அந்த புகாரின் அடிப்படையில் மணப்பாறை அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.20/2022 சட்டப்பிரிவுகள் 498(A),494, 506(1) இ.த.ச. பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாருடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்துள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அவர் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடிய போது அவர்கள் தலைமறைவாக இருந்ததால் கைது செய்ய இயலவில்லை என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக 09.02.2023 அன்று கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமான தோன்றிய விஷயங்கள் குறித்து குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரி தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**<u>7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரிகளின் மீது சட்ட பிரிவுகள் 498(A), 494, 506(i) IPC-ன் கீழ் வனையப்பட்ட குற்றச் சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**<u>8. தீர்வு</u>:**

8.1. அரசு தரப்பில் அரசு வழக்கினை நிரூபணம் செய்யும் விதமாக அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், அ.சா.1 அளித்த புகார் அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, ஆகிய சான்றாணவங்கள் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் செய்துள்ள எதிர் வாதத்தை நிரூபணம் செய்யும் விதமாக எந்த ஒரு சாட்சியும், சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

9. எதிரித் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு வழக்கானது எதிரிக்கு எதிராக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**<u>10. தீர்வு:</u>**

**(10.1)** பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் இரண்டுமே ஒன்றுக்கொன்று பிணைந்து இருப்பதால் இரு பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது

**(10.2)** இந்திய சாட்சி சட்டம் பிரிவு 101 படி எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பில் சார்ந்ததாகும் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1முதல் அ.சா.2. வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் அரசு தரப்பில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் **498(A), 494, 506(i) IPC**-ன் கீழான குற்றங்களின் உட்கூறுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? மற்றும் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**(10.3)** அ.சா.1 வழக்கில் புகார்தாரர் ஆவார். அவரின் சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது. அவர் இவ்வழக்கின் ஆணிவேரான புகார்தாரர் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால் 1ம் எதிரி எனது கணவர்

என்றும், 1ம் எதிரியுடன் தற்போது சேர்ந்து குடும்பம் நடத்தி வருகிறேன் என்றும் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என புகார்தாரர் வாக்குமூலத்தையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி அவர்கள் சாட்சியமானது அரசு தரப்பு சான்று புகார் வாக்குமூலத்தின் நம்பக தன்மையை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

**(10.4)** மேலும் அ.சா.1எதிரிகள் குறித்தும் அவர்களின் குற்றம் ஒரு செய்கை குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.அ.சா.1.இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் **498(A), 494, 506(i) –**ன் கீழான எந்த ஒரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**(10.5)** அரசு தரப்பில் இறுதியாக புலன் விசாரணை செய்த அதிகாரி அவர்கள் அ.சா.2 ஆக விசாரிக்கபட்டார். அவர் தான் மேற்கொண்ட புலன் விசாரணை குறித்தும், சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது அவர்கள் தலைமறைவாக இருந்ததால் கைது செய்ய இயலவில்லை என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக

09.02.2023 அன்று கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்த வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரே புகார் வாக்குமூலத்தை மறுத்து சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பெரும் பிறழ்சாட்சியாகி விட்டார். அடுத்ததாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் எதிரிகளுக்கும் அரசு தரப்பு வழக்கிற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியை தவிர மற்ற சாட்சிகள் அனைவரும் அரசு தரப்பு வழக்கிற்கு மாறாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**(10.6)** எதிரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு **498(ஆ)**வின் கீழ் குற்ற பொறுப்புக்கு உள்ளக்கிட வேண்டுமானால் கீழ்க்கண்ட முக்கிய கூறுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்

11) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு498(ஆ)வின் படி

பெண்ணின் கணவர் அல்லது கணவரின் உறவினர் அவளை கொடுமை கொடுமை இளைப்புக்கு உட்படுத்தி இருக்க வேண்டும்.

விளக்கம்: பெண்ணை தற்கொலை செய்து கொள்ளக்கூடிய முடிவுக்கு செல்லும் வகையில் வேண்டுமென்றே சில நடவடிக்கைகளை செய்தல்

அல்லது அவளுக்கு காயம் ஏற்படுத்துதல் அல்லது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துதல் அல்லது உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் தீங்கை ஏற்படுத்துதல் அல்லது

ஆ. சட்ட விரோதமாக சொத்து அல்லது மதிப்பு ஒரு கிணையும் எதையும் பெறுகின்ற வகையில் அவளை கொடுமைப்படுத்துதல் குறிக்கும்

**12)** அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் எந்த ஒரு இடத்திலும் 1வது எதிரியும் மற்ற எதிரியும் தன்னை திருமண ஆனால் முதல் இருந்து கொடுமை செய்து வந்தார்கள் என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு498(ஆ)வின் பிரிவின் குற்றக் கூறுகளை நிறைவேற்றுவதற்கு ஒரு பெண்ணை அவர் கணவர் அல்லது அவரது உறவினர்கள் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு தூண்டியிருக்க வேண்டும் ஆனால் அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் எந்த ஒரு இடத்திலும் எதிரியும் மற்ற எதிரிகளும் தன்னை தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு கொடுமைப்படுத்தினார்கள் என்று சாட்சியம் கூறவில்லை. அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் எந்த ஒரு இடத்திலும் அ.சா.1க்கு திருமணம் ஆன நாள் முதல் இருந்து எதிரி அவரை கொடுமைப்படுத்தி வந்தனர் என்று எந்த ஒரு விவரத்தையும் தன்னுடைய சாட்சியத்தில் கூறவில்லை.

**13) SAGARI HEMBRAM VS STATE OF WEST BENGAL AND ANRS**இன்று கல்கத்தா உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் கோபால் நாள் எதிர் ராஜஸ்தான் அரசு **1979 (2)SCC 170**இன்று தீர்ப்பின் அடிப்படையில் இந்திய

தண்டனைச் சட்டம் பிரிவு **498A** குற்றக் கூறுகளை இந்நீர் வழக்கானது நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு **சந்தேகத்திற்கிடமின்றி** தெரிவிக்கப்படவில்லை என நீதிமன்றம் கருதுகின்றது மற்றும் **DARA LAKSHMI NARAYANA &ANRS VS.STATE OF TELANGA & ANOTHER** என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் எதிரிகள் வரதட்சணை கேட்டதாக எந்த ஒரு சாட்சியம் அளிக்காத நிலையில் வரதட்சணை வழக்கமானது நிலைக்கதக்கதலை என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தமது தீர்ப்பின் கூறி உள்ளது. இந்த வழக்கிற்கு பொருந்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

**14)** மேற்படி சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கின் எதிரி இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498(A), 494, 506(1) IPC-ன் படி குற்றக் கூறுகளை இந்நீர் வழக்கானது நிரூபிக்கவில்லை என்ற காரணத்தினால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**15)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1. புகார்தாரர் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.2 வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் புலன் விசாரணை செய்த அதிகாரியும் ஆவார். அ.சா.1. மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில்

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டதாக இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 498(A), 494, 506(i)–ன் கீழான குற்றச்சாட்டுகளும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்கள் குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(1)ன் கீழ் அவரை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**16)** மேற்படி 1 முதல் 3 வரையிலான எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணை முறிவு பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு சொத்துக்கள் குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 04–ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.04 17:27:04 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**<u>இணைப்பு</u>:**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 திருமதி. கௌசல்யா
2. அ.சா.2 திருமதி. லியோனியா (காவல் உதவி ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்ப்பட்ட சான்றாவணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகாரில் உள்ள திருமதி. கௌசல்யா என்பவரது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | – | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | – | முதல் தகவல் அறிக்கை |

**<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>**: இல்லை.

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை.**

ASHOKUMAR R

Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.06.04 17:26:59 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

<u>பின்குறிப்பு:–</u>

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.